2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஆலந்தலை கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறை கடலரிப்பு தடுப்புக் கூட்டம்மூலம் ரூபாய் 52 கோடியே 46 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, தற்போது பொதுப் பணித் துறையினுடைய பரிசீலனையில் உள்ளது. அதன்பின் தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியன்பட்டணம் கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி CSR நிதியைக்கொண்டு 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை கிராமத்தில் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்கு மீன் வளத் துறைமூலம் 30 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய தீவிர பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–30

4. அறிவிப்புகள்

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்களின் வினா எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் விவரங்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக தலா 1 முதல் 100 வரையிலான வினாக்கள்–விடைகளை உள்ளடக்கிய 2020 ஆம் ஆண்டிற்கான நான்காவது மற்றும் ஐந்தாவது உடுக்குறியிடாத*

வினாக்கள்—விடைகள் பட்டியல்களில் உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம் PDF முறையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகளின் நகல்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 10 முதல் 12 வரையிலான 3 அறிக்கைகள், பொதுக் கணக்குக் குழுவின் 105 முதல் 128 வரையிலான 24 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் 104 முதல் 111 வரையிலான 8 அறிக்கைகள் மற்றும் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள 3 அறிவிக்கைகள் மற்றும் 11 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.